# சிங்கப்பூரில் ஜமால் முஹம்மது கல்லூரி மாணவர்களின் சமூகத் தொண்டு



திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை) ஆற்றி வரும் சமூகத் தொண்டுகளின் வரிசையில், சென்ற *18-9-2011* ஞாயிற்றுக் கிழமை அன்று காலை *10* மணிக்கு "செயல் திறமிக்க கருத்துப் பரிமாற்றுத் திறமைகள்" *(*Effective Communication Skills*)* என்ற தலைப்பில் பொது மக்களுக்கான இலவச கருத்தரங்கு ஒன்றை வில்கி சாலை Kaplan Institute, வில்கி வளாகம் இரண்டாவது தளத்தில் மிகச்சிறப்பாக நடத்தியது.

இலவச கல்விப் பணி மற்றும் சமூகத் தொண்டு புரிவதையே பிரதான நோக்கமாகக் கொண்ட இச்சங்கத்தின் ஏற்பாட்டில் நடந்தேறிய இக்கருத்தரங்கில் சுமார் *100* பேர் கலந்து பயன் பெற்றனர். கருத்தரங்கு மற்றும் பயிலரங்குகள் நடத்துவதில் பல்லாண்டுகள் அனுபவம் பெற்ற திரு. ஹாஜா ஜபருல்லாஹ், இந்த இலவச கருத்தரங்கை பொது மக்களுக்காக நடத்தினார்.



தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத்தின் தலைவர் திரு ஹரிகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, பேச்சாளர் மன்றத்தின் சிறப்பைப் பற்றி எடுத்துரைத்தார். சங்கத்தின் செயலாளர் அப்துல் சுபஹான் கருத்தரங்கை துவங்கி வைக்க, சிறப்பு விருந்தினருக்கும் கருத்தரங்கு நடத்தியவருக்கும் சங்கத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசுகளை வழங்கினார் சங்கத்தின் தலைவர் முஹிய்யத்தீன் அப்துல் காதர். சமுதாய நலனையும் மேம்பாட்டையும் கருத்தில் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத் தரங்கு பிற்பகல் *1* மணியளவில் இனிதே நிறைவுற்றது.